**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

**முன்னிலை:** M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS),
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 01-ஆம் நாள் திங்கட்கிழமை

CC. No. 349 of 2025

CNR No. TNTV15-001470-2025

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குடவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 334/2023 ----- குற்றமுறையிடுபவர்

- எதிர் -

ஜெகதீசன், 26/2026,
த/பெ. இராஜேந்திரன்,
புதுத் தெரு,
வடகண்டம். ----- எதிரி

------

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No.349 of 2025 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by Inspector of Police, Kodavasal PS. in Cr.No.334/2023 |
| 3. | Name of the accused | R.Jagadeesan |
| 4. | Father's Name | S/o. Rajendiran |
| 5. | Occupation | - |



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:47:17 +0530

<table>
<tr><td>6.</td><td>Residence</td><td colspan="3">New Street, Vadangandam</td></tr>
<tr><td>7.</td><td>Age</td><td colspan="3">26/2026</td></tr>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">10.07.2023</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">11.07.2023<br>12.07.2023</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">12.07.2023</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">25.07.2023</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s 207 Cr.P.C.</td><td colspan="3">11.03.2026</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 17.04.2026 the accused questioned on substance of accusation U/s 386,506(ii) IPC. Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="5">15</td><td rowspan="5">Date of commencements of trial -The date of examination – in chief and cross-examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>14.05.26</td><td>-</td></tr>
<tr><td>PW2</td><td>20.05.26</td><td>-</td></tr>
<tr><td>PW3</td><td>20.05.26</td><td>-</td></tr>
<tr><td>PW4</td><td>22.05.26</td><td>22.05.26</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">25.05.2026</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீது சட்டப்பிரிவு 386,506(ii) இதச-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளில் இருந்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.</td></tr>
</table>



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:47:22 +0530

| | | |
|---|---|---|
| 18. | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts |
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | இவ்வழக்கில் சி.பி.45/26 ல் ஆஜர்படுத்தப்பட்ட 37 செ.மீ. நீளமுள்ள மரகைப்படியுடன் கூடிய கத்தி ஒன்று (வெட்டும் பாகம் 24 cm மரகைப்படி 13 cm) மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அரசுக்கு ஆதாயம் செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தும், குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

**அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்** :-

1. குடவாசல் காவல் சரகம் வடகண்டம் வெட்டாற்று பாலம் அருகே இவ்வழக்கின் வாதி திருவாரூரில் வேலையை முடித்து விட்டு தனது வீடான மணக்காலுக்கு வருவதற்கான தனது இருசக்கர வாகனத்தில் 10.07.2023 ஆம் தேதி இரவு 11.00 மணியளவில் வந்துக்கொண்டிருந்த போது இவ்வழக்கின் எதிரியாகிய நீர் லிப்ட் கேட்பது போல் இருசக்கர வாகனத்தை நிறுத்தியும், வாதியிடம் கத்தியை எடுத்துக்காட்டி பாக்கெட்டுல இருக்குற பணத்தை எடுடா இல்லன்னா இந்த கத்தியாலேயே குத்தி கொன்னுபுடுவேன்னு மிரட்டியும், வாதி பாக்கெட்டில் இருந்த 600 ரூபாய் பணத்தை மிரட்டி குற்றம்புரிந்துள்ளதால் எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 386,506(ii) IPC ன் கீழ்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:47:26 +0530

தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இவ்வழக்கின் விசாரணை அதிகாரியால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் மேற்படி குற்ற இறுதி அறிக்கையும், மற்ற ஆவணங்களையும் பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை அதனுடன் இணைந்த ஆவணங்களை பரிசீலினை செய்தபோது எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு போதிய முகாந்திரம் இருந்த காரணத்தினால் எதிரி மீது சட்டப்பிரிவு 386,506(ii) இதச-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோது எதிரி தன் மீதான குற்றத்தை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என கூறினார். அதன் பின்னர் அரசுத்தரப்பில் சாட்சியமளிக்க உத்தரவிடப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது.

6. <u>இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு</u> :-

(i) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் மேற்படி முகவரியில் வசித்து தற்போது சென்னையில் வசித்தும் சென்னையிலுள்ள கோகுலம்



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:47:30 +0530

உணவகத்தில் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், கடந்த 2023 ம் ஆண்டு தேதி மாதம் ஞாபகமில்லை என்றும், ஒரு நாள் இரவு சுமார் 11.00 மணியலவில் கரண்ட் இல்லாமல் இருந்தது என்றும், நான் திருவாரூரில் எனது பணியை முடித்துவிட்டு மணக்காலில் உள்ள தனது வீட்டிற்கு எனது இருசக்கர வாகனத்தில் இரவு சுமார் 11.00 மணியளவில் வடகண்டத்தில் உள்ள வெற்றாற்று பாலம் அருகே வந்து கொண்டிருந்த போது ஒரு நபர் என்னிடம் லிப்ட் கேட்டார். நான் வண்டியை நிறுத்தினேன் என்றும், அப்போது அந்தநபர் ஒரு கத்தியை காட்டி தன்னிடம் பணம் கொடு இல்லையென்றால் கொன்று விடுவேன் என்று மிரட்டினார் என்றும், தான் பயந்து கொண்டு என்னிடமிருந்த ரூ600/- பணத்தை கொடுத்துவிட்டேன் என்றும், அந்த நபர் Central University வழியாக ஓடிவிட்டார் என்றும், தான் மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் மனு கொடுத்தேன் என்றும், தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும், அதில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்டுகிறது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

(ii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.2 அவரது சாட்சியத்தில், தான் மேந்ாடி முகவரியில் வசித்து வந்து பூக்கடை வியாபாரம் செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், மேற்படி கையொப்பத்தை எப்பொழுது போட்டேன் என்று தனக்கு ஞாபகம் இல்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:47:34 +0530

(iii) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.3 அவரது சாட்சியத்தில், தான் மேற்படி முகவரியில் வசித்து வந்து விவசாயம் செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், அ.சா.1 ஐ தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுல்ல என்றும், வழக்கு சம்பவத்தை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சிமளித்துள்ளார்.

(iv) இவ்வழக்கை பற்றி சாட்சியமளித்த அ.சா.4 அவரது சாட்சியத்தில், தான் தற்போது குடவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், மேற்படி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த கோபிநாத் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்றும், குற்ற எண்.334/2023 வழக்கின் வழக்கு கோப்பு ஆவணங்களை பார்வையிட்டு இவ்வழக்கில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 12.07.2023 ம் தேதி குடவாசல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் கோபிநாத் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது மணக்கால் அய்யம்பேட்டை நாடார் தெருவைச் சேர்ந்த நடேசன் மகன் சபரிநாதன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய குற்ற எண் 334/2023, ச.பி. 386, 506(2) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், பார்வை மகசரில் உள்ள அ.சா.2 ன் முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், **அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், மேலும் புகார்தாரர் குருமூர்த்தி கொடுத்த புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்பு அன்றைய தினமே பிற்பகல் 12.30 மணிக்கு சம்பவயிடமான வடகண்டம் வெற்றாற்று பாலம் அருகே சாட்சிகள் முருகையன் மற்றும் இராஜேந்திரன்



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:47:39 +0530

ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார் என்றும், அந்த பார்வை மகசர் மேற்கண்ட சாட்சிகளிடம் சம்பவயிடத்திலேயே சாட்சி கையொப்பம் பெற்றார் என்றும், ( **சம்பவயிடத்தில் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) என்றும், பின்பு சாட்சிகள் சபரிநாதன், பக்கிரிசாமி, மாரிமுத்து, முருகையன், இராஜேந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே சம்பவம் பற்றி கூறிய விபரங்களை வாக்குமூலமாக பதிவு செய்துள்ளார் என்றும், சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேடியதில் கடந்த 12.07.2023 ம் தேதி மதியம் 14.30 மணிக்கு வடகண்டம் பெரிய முதலி ஐய்யனார் கோவில் பஸ்டாப் அருகே எதிரி ஜெகதீசன் என்பவரை குற்ற காரணம் கூறி கைது செய்து பின்பு அவரை விசாரணை செய்து எதிரி தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வீட்டில் மறைத்து வைத்திருந்த கத்தியை ஆஜர் செய்ததை மகசர் மூலம் கைப்பற்றி சாட்சிகள் அஜய் மற்றும் மணிகண்டன் ஆகியோர் முன்னிலையில் மாலை 15.20 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் மேற்கண்ட சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார் என்றும், ( **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) என்றும், (**எதிரி தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்றும், பின்பு கைது செய்யப்பட்ட எதிரியையும் தடயங்களையும் எதிரி மற்றும் தடயங்களுடன் காவல் நிலையம் வந்து மேற்படி எதிரியை தக்க வழிக்காவல் மூலம் திருவாரூர், மாண்புமிகு குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் முன்பு நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், ( **பின்பு கைப்பற்றப்பட்ட தடயப்பொருளான கத்தியை படிவம் 95 ன் மூலம்**



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:47:43 +0530

**சி.பி.எண்.45/2026 எனப் பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன்** என்றும், **அந்த படிவம் 95 அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது** என்றும், **அந்த தடயபொருளான கத்தி சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்றும், சாட்சிகளை முறையாக விசாரணை செய்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால் கடந்த 12.07.2023 ம் தேதி எதிரி ஜெகதீசன் என்பவர் மீது 386, 506(ii)இதசவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சிமளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313(3)-ன் படி வினவியபோது எதிரி "பொய் சாட்சி" என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் "இல்லை" என்று கூறினார்கள். இவ்வழக்கில் குவிமுச பிரிவு 320-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

8. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

9. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கு சம்பவமானது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11. இவ்வழக்கின் எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர், இவ்வழக்கில் சாட்சிகளிடம் காணப்படும் குறைபாடுகளை சுட்டிக் காண்பித்து அதனால் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:47:47 +0530

12. **அரசு தரப்பு சாட்சியங்களை மதிப்பிடுதல்**:-

இவ்வழக்கின் அ.சா.1 கொடுத்த புகாரில், வாதியான சபரிநாதன், குடவாசல் காவல் சரகம் வடகண்டம் வெட்டாற்று பாலம் அருகே இவ்வழக்கின் வாதி திருவாரூரில் வேலையை முடித்து விட்டு தனது வீடான மணக்காலுக்கு வருவதற்கான தனது இருசக்கர வாகனத்தில் 10.07.2023 ஆம் தேதி இரவு 11.00 மணியளவில் வந்துக்கொண்டிருந்த போது இவ்வழக்கின் எதிரியாகிய நீர் லிப்ட் கேட்பது போல் இருசக்கர வாகனத்தை நிறுத்தியும், வாதியிடம் கத்தியை எடுத்துக்காட்டி பாக்கெட்டுல இருக்குற பணத்தை எடுடா இல்லன்னா இந்த கத்தியாலேயே குத்தி கொன்னுபுடுவேன்னு மிரட்டியும், வாதி பாக்கெட்டில் இருந்த 600 ரூபாய் பணத்தை மிரட்டி குற்றம் புரிந்துள்ளதாக புகார் அளித்துள்ளார்.

13. ஆனால், நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்த அ.சா.1 தனது முதல் விசாரணையில், தான் மேற்படி முகவரியில் வசித்து தற்போது சென்னையில் வசித்தும் சென்னையிலுள்ள கோகுலம் உணவகத்தில் வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், கடந்த 2023 ம் ஆண்டு தேதி மாதம் ஞாபகமில்லை என்றும், ஒரு நாள் இரவு சுமார் 11.00 மணியலவில் கரண்ட் இல்லாமல் இருந்தது என்றும், நான் திருவாரூரில் எனது பணியை முடித்துவிட்டு மணக்காலில் உள்ள தனது வீட்டிற்கு எனது இருசக்கர வாகனத்தில் இரவு சுமார் 11.00 மணியளவில் வடகண்டத்தில் உள்ள வெற்றாற்று பாலம் அருகே வந்து கொண்டிருந்த போது ஒரு நபர் என்னிடம் லிப்ட் கேட்டார். நான் வண்டியை நிறுத்தினேன் என்றும், அப்போது அந்தநபர் ஒரு கத்தியை காட்டி தன்னிடம் பணம் கொடு இல்லையென்றால் கொன்று விடுவேன் என்று மிரட்டினார் என்றும், தான் பயந்து கொண்டு என்னிடமிருந்த ரூ600/-



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:47:51 +0530

பணத்தை கொடுத்துவிட்டேன் என்றும், அந்த நபர் Central University வழியாக ஓடிவிட்டார் என்றும், தான் மேற்படி சம்பவம் தொடர்பாக புகார் மனு கொடுத்தேன் என்றும், தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு தான் கொடுத்தது தான் என்றும், அதில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்டுகிறது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் புகார் மனுவில் கூறியுள்ள சங்கதிகளுக்கு முற்றிலும் நேர் எதிரான சங்கதிகளை கூறி சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அவரது சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவின்றி முரண்பட்டதாக உள்ளது என்பதை தெளிவாக காண முடிகிறது. இவ்வாறு இருக்கையில், பார்வை மகசர் சாட்சியான அ.சா.2 ம், கைப்பற்றுதல் மகசர் சாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.4 ம் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளனர். அவர்களை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்ட போதிலும், அரசு தரப்பில் அவருக்கு ஆதரவாக அவர்களிடமிருந்து எவ்வித சாட்சியமும் குறுக்கு விசாரணையில் பெறப்படவில்லை.

14. எனவே, அரசு தரப்பு வழக்கில் கூறியுள்ளவாறு எதிரி சம்பவத்தில் ஈடுபட்டதற்கோ, அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை புரிந்ததற்கோ போதிய முகாந்திரம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியளிக்காத பட்சத்தில் அ.சா.4-ன் சாட்சியத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரி குற்றவாளி என்று கருதுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. இவ்வழக்கின் ஆவணங்களை கவனமாக ஆராயும்போது, இவ்வழக்கில் உள்ள பிரச்சனை முற்றிலும் தனி நபர் தன்மையுடைய வினா சம்மந்தப்பட்டதாக இருக்கிறது என்பதையும், அரசுத் தரப்புக்கு சாதகமான நிலையில் முடிவினை எட்ட முடியாத நிலையில் இந்நிலையில், இவ்வழக்கை நடப்பில் வைத்திருப்பது ஒரு ஆடம்பரமே என்றும், இவ்வழக்கை முடிவுக்கு



MOHAMED ARSHAD FAREED M
Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:47:56 +0530

கொண்டுவருவதன் மூலம் நீதிமன்றத்தின் பெரும்சுமையை குறைப்பதுடன் நீதிமன்றத்தின் நேரத்தை சேமிப்பதிலும், அதனை அர்த்தமுள்ள வழக்குகளை மிகவும் நன்முறையில் தீர்வு காண பயன்படுத்தவும் இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. எனவே, இவ்வழக்கில் எதிரி மீது சட்டப்பிரிவு 386,506(ii) இதச-ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

## உத்தரவு

17. முடிவாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீது சட்டப்பிரிவு 386,506(ii) இதச-ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

18. எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சி.பி.45/26 ல் ஆஜர்படுத்தப்பட்ட 37 செ.மீ. நீளமுள்ள மரகைப்படியுடன் கூடிய கத்தி ஒன்று (வெட்டும் பாகம் 24 cm மரகைப்படி 13 cm) மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அரசுக்கு ஆதாயம் செய்ய உத்தரவிடப்படுகிறது.



MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:48:01 +0530

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணிணியில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 01-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:48:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
குடவாசல்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. சபரிநாதன்-புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. முருகையன்-பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.3 | திரு. அஜய்- ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| அ.சா.4 | திரு. கலியுகவர்ணன்-உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12.07.2023 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 12.07.2023 | பார்வை மகசரில் உள்ள அ.சா.2 ன் முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 12.07.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 12.07.2023 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 12.07.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 12.07.2023 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.7 | 12.07.2023 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.8 | 12.07.2023 | படிவம் 95 |

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>**:-

சா.பொ.1 – தடயபொருளான கத்தி

**<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்</u>**:- இல்லை

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:48:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

குடவாசல்.

**<u>வழக்கு சுருக்கம்</u>**

<table>
<tr><td>1.</td><td>எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள்</td><td colspan="3">12.07.2023 முதல் 25.07.2023</td></tr>
<tr><td>2.</td><td>குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">11.12.2025</td></tr>
<tr><td>3.</td><td>குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள்</td><td colspan="3">17.04.2026</td></tr>
<tr><td>4.</td><td>தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம்</td><td colspan="3">அரசு தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 311-ன் கீழ் 22.05.2026 அன்று தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது.</td></tr>
<tr><td rowspan="5">5.</td><td rowspan="5">சாட்சிகள் விசாரணை</td><td>Witness</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>PW-1 :</td><td>14.05.26</td><td>-</td></tr>
<tr><td>PW-2 :</td><td>20.05.26</td><td>-</td></tr>
<tr><td>PW-3 :</td><td>20.05.26</td><td>-</td></tr>
<tr><td>PW-4 :</td><td>22.05.26</td><td>22.05.26</td></tr>
<tr><td>6.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 313-ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">25.05.2026</td></tr>
<tr><td>7.</td><td>எதிரி தலைமறைவு காலம் பற்றிய விபரம்</td><td colspan="3">-</td></tr>
<tr><td>8.</td><td>மேல்முறையீட்டு நீதிமன்றத்தால்</td><td colspan="3">-</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விபரங்கள் | |

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.01 04:48:20 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**குடவாசல்.**